IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO.105/2021

Deposition of Witness for P.W.11

| | | |
|---|---|---|
| NAME | - | Tr. Rajesekaran |
| FATHER NAME | - | Tr.Velu |
| VILLAGE | - | Thottapalayam, Vellore |
| TALUK | - | |
| OCCUPATION | - | Electrical Work (contract) |
| AGE | - | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 31.07.2025.

எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மாதா கோவில் தெரு, தோட்டபாளையத்தில் குடியிருக்கிறேன். ஆஜரான எதிரிகள் ஜெகன் மற்றும் மணிகண்டனை எனக்குத் தெரியும். 14.01.2021 பொங்கல்அன்று காலை 9 அல்லது 9.30 மணியளவில் பழைய பைபாஸ் அருகே நானும் எனது நண்பர் சுந்தரும் நடந்து பொய் கொண்டிருந்த போது காவல் ஆய்வாளரின் வாகனம் வந்தது. ஆய்வாளர் ஜீப்பை நிறுத்தி என்னையும் சுந்தரையும் விசாரணைக்கு வரவேண்டும் என்று கேட்டார். ஜீப்பில் ஆஜர் எதிரி ஜெகன் , மணிகண்டன் இருந்தார்கள். இன்னொரு எதிரி அலெக்ஸ் இருந்தார். ஜீப்பில் இருந்த எதிரிகளை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் விசாரணை செய்தார். முதலில் எதிரி ஜெகன், மணிகண்டன் மற்றும் அலெக்ஸ ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதை போலீசார் டைப் செய்தார்கள். அதில்

V-Rajas

சாட்சியாக என்னிடமும் , சுந்தரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஜெகன் அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது அந்த 2 வது கையெழுத்து அ.த.சா.ஆ.8 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி மணிகண்டன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.9. என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி அலெக்ஸ் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.10. பின்னர் எங்களை எதிரிகளோடு ஜீப்பில் உட்கார வைத்து வேலூர் கோட்டை காந்தி சிலைக்கு அழைத்து வந்தார்கள். அங்கு போலீசார் பாலாகிருஷ்ணன் என்ற எதிரியை பிடித்து கைது செய்து அவரையும் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பாலாகிருஷ்ணன் என்பவருடைய ஒன்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.11. பின்னர் அங்கிருந்தது மதியம் 3 அல்லது 3.30 மணிக்கு வேலூர் பாலாறு சுடுகாட்டுக்கு எதிரிகள் 4 பேரோடு எங்களையும் கூட்டிக் கொண்டு வந்தார்கள். பின்னர் 4 பேரும் சுடுகாட்டில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஜெகன் கத்தியை எடுத்து போலீசாரிடம் கொடுத்தார். எதிரி ஜெகன் அங்கிருந்த செடிக்குள் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து போலீசாரிடம் ஆஜர் செய்தார். போலீசார் மேற்கண்ட 2 கத்தியையும் அளவுகளை குறித்துக் கொண்டு எங்கள் முன்னிலையில்

V. Rajan

எழுதினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.12 , சா.பொ.4 மற்றும் சா.பொ.5 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை –

இவ்வழக்கில் இறந்து போன வேலு யார் என்று எனக்குத் தெரியாது. நான் அவரது உறவினர் கிடையாது. நான் என்னுடைய வீட்டிற்கும் பழைய பைபாஸிற்கும் இடையே 3 கி.மீ. தூரம் இருக்கும். அன்று நானும், சுந்தரரும் நேஷனல் தியேட்டர் பழைய பைபாஸ் ரோட்டில் நடந்து போனோம். எந்த இடத்தில் போலீசார் எங்களை நிறுத்தி விசாரித்தார் என்று நினைவில்லை. நேஷனல் தியேட்டர் பழைய பைபாஸ் இருந்து எவ்வளவு தூரம் போனேன் என்றும், எந்த திசையில் போனேன் என்றும் நினைவில்லை. நாங்கள் நடந்து போகும் போது போலீஸ் ஜீப் எனக்கு எதிரில் வந்தது. நாங்கள் நடந்து போன இடத்தில் இருந்து எவ்வளவு துராத்தில் நேஷனல் தியேட்டர் இருந்தது என்றால் சுமார் 0.5 கி.மீ தூரம் இருக்கும். ஜீப்பில் போலீஸ் டிரைவர், இன்ஸ்பெக்டர் பின்னால் 3 எதிரிகள் இருந்தார்கள். போலீசார் ஜீப்பை ஓரமாக நிறுத்தி வைத்துவிட்டு எதிரிகளை விசாரித்தார்கள். அந்த நேரத்தில் பொது மக்கள் எத்தனை பேர் கூடினார்கள் என்று எனக்குத் தெரியாது. எங்களை விசாரித்த இடத்தில் சாலையின் இரு புறத்திலும் கடைகள் நிறைய உள்ளது என்றால் சரி. அந்த இடம் பிரதான சாலை என்றால் சரி. அந்த சாலையில் இருசக்கர வாகனம், 4 சக்கர வாகனம் வருவதும்

V. Rajavel

போவதுமாக இருக்கும். அதேபோல் பொது மக்களும் அந்த சாலையில் வருவதும் போவதுமாக இருப்பார்கள். போலீசார் அந்த இடத்தில் எதிரிகளை விசாரித்துவிட்டு வேலூர் கோட்டைக்கு வந்தார்கள். நந்தினி என்னுடைய தயார். என்னுடைய தகப்பனார் பெயர் வேலு. எனது தாத்தா பெயர் சிதம்பரம். போலீசார் எதிரிகளை விசாரித்த போது லேப்டாப்பில் டைப் செய்தார்கள். எங்களை விசாரித்த போதே லேப்டாப்போடு வந்து விட்டார்கள். அண்ணா சாலையின் மேற்குப் புறத்தில் காந்தி சிலை உள்ளது என்றால் சரி. காந்தி சிலைக்கு எந்த திசையில் பாலகிருஷ்ணனை கைது செய்தார்கள் என்றால் திசை செரியவில்லை. அவர் அங்கு தான் இருந்தார். அந்த இடத்தில் பொது மக்கள் எப்போதும் போவதும் வருவதுமாக இருப்பார்கள். நான் சொல்லும் இடத்திற்கு அருகில் தள்ளு வண்டி கடைகள் அதிகம் உள்ளது. காந்தி சிலைக்கு போலீசார் யார் வந்தார் என்று எனக்கு தெரியாது. ஆனால் இன்ஸ்பெக்டருடன் நாங்கள் போனோம். போலீசார் விசாரணையில் எந்த எதிரி கத்தியை எடுத்து கொடுத்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை கைப்பற்றிய இடமான சுடுகாட்டிற்கும், காட்பாடி பிரிட்ஜிக்கும் இடைப்பட்ட துாரம் 1/2 கி.மீ. இருக்கும் என்றால் சரியல்ல. சுடுகாட்டில் செடிகளிடமிருந்து கத்தியை எடுத்து போலீசாரிடம் கொடுத்தார். சுடுகாட்டின் உள்ளே தகன மேடை உள்ளது. சுடுகாட்டின் ஆரம்பத்தில் தகன மேடை இல்லை. சுடுகாட்டின் தகன மேடையில் இருந்து 15 அடி துாரத்தில் உள்ள செடிக்கு உள்ளே இருந்து கத்தியை எடுத்து போலீசாரிடம்

V. Rajiva

கொடுத்தார். இறந்த உறவினர் வேலு எனது சொந்தக்காரர் என்பதால் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் போலீசார் எதிரிகளை விசாரிக்கவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றும், வழக்கு சொத்தை கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் செய்ததாக சொல்லப்படும் கையெழுத்துகள் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் சரியல்ல. V. Rajees

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 31.07.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

31.7.25

**Additional District Judge(FTC)**
**Vellore.**